GODDependence
True freedom is being dependent on God
செய்தி மடல்
மார்ச் 2025



# ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன், ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.
(யாக்கோபு 5: 13)

“நான் இதைச் செய்திருந்தால், நான் அதைத் தவிர்த்திருக்கலாம் அல்லது அதைப் பெற்றுக் கொண்டிருப்பேன்” என்று தங்கள் வாழ்வில் நடக்காத விஷயத்தைப் பற்றி சிலர் பேசுவதுண்டு. சிலர் தங்கள் கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், தங்களுடைய கடந்த கால சிறப்பான வாழ்க்கையை நினைத்து அல்லது கடந்த கால தோல்விகளை நினைத்து வருந்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கடந்த காலத்தில் முடிந்து போனவைகள் முடிந்து போனவைதான், அவைகளை நாம் மாற்ற முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நிகழ் காலத்தில் வாழ்கிறவர்களாக இருந்து, எதிர்காலத்திற்காக நம்மை ஆயத்தம் செய்கிறவர்களாக வாழ வேண்டும்.

யாக்கோபு 5ஆம் அதிகாரத்தில், நிகழ்காலத்தில் வாழ்வதற்கான சில நடைமுறை ஆலோசனைகளை நாம் காண்கிறோம். யாக்கோபு சில எளிய கேள்விகளைக் கேட்டு, அப்படிப்பட்ட சமயங்களில் நாம் என்ன செய்ய வேண்டும் எனச் சொல்கிறார். ஒருவர் துன்பப்பட்டால், அவர் உடனடியாக செய்ய வேண்டியது ஜெபம் செய்வது ஆகும். யாக்கோபு 5:13இல், அது என்ன வகையான துன்பம் என யாக்கோபு குறிப்பிடவில்லை. அவருடைய காலத்தில், யூதக் கிறிஸ்தவர்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தினிமித்தம் அனேக உபத்திரவங்களையும், பாகுபாடுகளையும், மற்றும் அவமானங்களையும் எதிர் கொண்டனர்.நாமும் நம் வாழ்வில் பலவிதமான துன்பங்களை எதிர்கொள்ள நேரிடலாம். அப்படிப்பட்ட சமயங்களில், நாம் ஜெபிக்கும்போது, நாம் தேவனைச் சார்ந்து இருக்கிறோம் என்பதையும், நம் துன்பத்தை ஜெயிக்க அவருடைய உதவியையும் வல்லமையையும் நாடுகிறோம் என்பதை வெளிப்படுத்துகிறோம்.

நாம் ஜெபிக்கும்போது, “ஜெபத்தினால் சந்திக்கப்பட முடியாத தேவை மற்றும் ஜெபத்தினால் தீர்க்கப்பட முடியாத பிரச்சனை என்று எதுவும் இல்லை” என்று நாம் தேவன் மீது நம்பிக்கையாக இருக்க முடியும். யாக்கோபு 5:13 எழுதப்பட்ட சூழலைப் பார்க்கும்போது, யாக்கோபு 5:13-18 வரையிலான வசனங்களில் ஜெபமானது முக்கியமான கருப்பொருளாக இருப்பதை நாம் காண்கிறோம். இந்த வேதப் பகுதியின் ஒவ்வொரு வசனமும் ஜெபத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது.

யூசிபியஸ் என்ற மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்தவ தலைவர் யாக்கோபு எப்பொழுதும் ஜெபிக்கும் மனிதராக, ஜெபத்தின் வல்லமையை விசுவாசித்த ஒருவராக வாழ்ந்தார் என எழுதுகிறார். முழங்காலில் நீண்ட நேரம் நின்று மக்களுக்காக அவர் ஜெபித்ததை அனைவரும் அறிந்திருந்தனர். அவருடைய முழங்கால்களில் ஒட்டகத்திற்கு இருப்பது போல காய்ப்பு இருந்தது. ஆகவே மக்கள் அவரை “ஒட்டகத்தின் முழங்கால்களை உடைய மனிதர்” என அழைத்தனர். யாக்கோபு தன் வாழ்வில் கைக்கொண்டு வந்தவைகளில் இருந்து ஜெபம் செய்ய உற்சாகப்படுத்தி எழுதுகிறார்.

ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கும்போது, சங்கீதம் பாட யாக்கோபு அழைக்கிறார். நாம் துன்பப்பட்டாலும், ஆசீர்வாதமாக இருந்தாலும், நாம் ஜெபம் மற்றும் துதிப் பாடல் மூலமாக தேவனிடம் செல்ல முடியும். நம்மை ஆசீர்வதிக்கிற தேவனை நாம் மறந்துவிடக் கூடாது. ஸ்டீவன் ஜே. கோல் என்பவர் சொல்வது போல, “நம் வாழ்வில் பாடுகள் அல்லது நிறைவான ஆசீர்வாதங்கள் என எவை இருந்தாலும், அது தேவனை நோக்கியதாக, தேவனைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.”

யாக்கோபு 1:2,3இல், “என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது. அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்” என்று யாக்கோபு எழுதுகிறார். “பாடுபடுகிறவருக்கும் உற்சாகமாக இருக்கிறவருக்கும் யாக்கோபு கூறும் ஒரே அறிவுரை” அதைக் கர்த்தரிடத்தில் எடுத்துச் செல் என்பதே. உண்மையைச் சொல்வதானால், இந்த இரண்டு கட்டளைகளையும் மாற்றிச் சொல்ல முடியும்: பாடுபடுகிறவர்கள் தேவனை துதித்து பாடவும், மகிழ்ச்சியாய் இருக்கிறவர்கள் தேவனை நோக்கி ஜெபிக்கவும் செய்யலாம்” என பாஸ்டர் டேவிட் கூஜிக் எழுதுகிறார். நம் வாழ்வின் நிகழ்கால சூழ்நிலைகள் என்னவாக இருந்தாலும், நாம் எல்லாவற்றிற்காகவும் தேவனிடம் ஜெபித்து அவரைத் துதிக்க முடியும்.

கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச்சோர்வை
தீய குணம் மாற்றுவார்.

- சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.

**எமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

**எமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

**நாம் தேவனுடைய பரிபூரண, அளவற்ற அன்பைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் குறைகள் நிரம்பிய மனிதர்களுக்கு தன் அன்பின் கடிதத்தை எழுதினார்.**

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் GODependence குழுவின் சார்பில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

வருடத்தின் இந்த மாதம் மிகவும் தனித்துவம் வாய்ந்தது. ஏனெனில் உலகெங்கிலும் கோடிக்கணக்கானோர் ஜெபம், நோன்பு, தன்னடக்கம் இவைகளில் தங்களை அர்ப்பணித்து ரமலான் அல்லது லெந்து காலத்திற்காக உபவாசம் மேற்கொள்கிறார்கள். இந்த பாரம்பரியங்கள் வெவ்வேறு நம்பிக்கைகளிலிருந்து வந்திருந்தாலும் அவை இரண்டுமே ஆன்மீக புதுப்பிப்பு மற்றும் தேவனோடு நெருங்கி நடப்பதற்காக ஏக்கத்தை பிரதிபலிக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் உபவாசம் மற்றும் ஜெபங்களில் இஸ்லாமியர்களின் உறுதியான நிலையிலிருந்து கற்றுக் கொள்ள முடியும்.

உபவாசம் என்பது வெறும் உணவை தவிர்ப்பது மட்டுமல்ல தடைகளைத் தகர்த்து தேவனை நோக்கி பார்த்து மாற்றத்தை தழுவிக் கொள்வதை குறிக்கிறது. பரிசுத்த வேதாகமம் மத்தேயு 6:16 ல், 'நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல .... இராதேயுங்கள்;' என்கிறது. உண்மையான உபவாசம் நமது இருதயத்தை ஜெபம், மனந்திரும்புதல் மற்றும் தருமச் செயல்களுக்குத் தூண்டுகிறது (மத்தேயு 6:1-18). நம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள் இந்த புனித வழக்கத்தில் ஈடுபடுவதைக் காணும்போது, நாமும் இந்த காலத்தை வேதாகமத்தை வாசிக்கவும், நம் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், கிறிஸ்துவின் தியாகத்தைப் பிரதிபலிக்கவும் பயன்படுத்துவோம்.

30 நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடிக்கும் ரமலான் கால வேதவாசிப்பு சவால் 6 வது முறையாக இந்த வருடம் பிப்ரவரி 28 இல் தொடங்கியது. இந்த வருடத்தில் முதல் முறையாக 40 நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடிக்கும் லெந்து கால வேதவாசிப்பு சவாலினை மார்ச் 5 ல் நாம் துவக்கியுள்ளோம். உங்களில் பலரும் தங்களது வழக்கமான வேதவாசிப்பு சவாலுடன் இவைகளில் ஏதாவது ஒன்றில் இணைந்திருப்பீர்கள் என நம்புகிறோம். இந்த தருணத்தில் ஜெபம், உபவாசம் மற்றும் வேத வசனங்களுக்கு நம்மை அர்ப்பணிக்க தேவன்தாமே நமக்கு உதவுவாராக.

இந்த மாதம் முதல் GODependence கருத்தரங்குகள் ஆரம்பிப்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். 2025 க்காக திட்டமிடப்பட்டுள்ள ஊழிய நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் எவ்வித தடையில்லாமலும் நடைபெற வேண்டுமென்று உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

'வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்' மற்றும் 'விளையாடுவோம் வேதாகம விளையாட்டு' போன்றவைகளில் உற்சாகமாக கலந்து கொள்கிற ஒவ்வொருவரையும் மனமார வாழ்த்துகிறோம். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - மார்ச் 2025

### துதிப்போம்:

1. 2025 பிப்ரவரி மாதத்தில் வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக.
2. 2025 பிப்ரவரி 28 ம் தேதி ஆரம்பித்திருக்கும் ரம்ஜான் வேதவாசிப்பு (Tamil & English) குழுக்களுக்காக.
3. முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள லெந்து கால வேதவாசிப்பு சவால் (Tamil & English) குழுக்களுக்காக.
4. 2024-2025 ஆம் கல்வியாண்டில் சிறுவர் வேதவாசிப்பு சவால்களில் (CBRC) கலந்து கொண்ட சுமார் 250 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்காக.
5. இதுவரையும் உலகின் பல்வேறு தேசங்களிலிருந்து GODependence வேத வாசிப்பு சவால்களில் பதிவுசெய்து கொண்டுள்ள 13365 நபர்களுக்காக.

### ஜெபிப்போம்:

1. 2025 மார்ச் மாத வேதவாசிப்பு சவால் குழுக்கள், ரம்ஜான் மற்றும் லெந்துகால வேதவாசிப்பு சவால் குழுக்களில் இணைந்து இருக்கின்றவர்கள் தொய்வில்லாமல் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க.
2. இந்த மாதத்தில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதும் நமது வேதவாசிப்பு குழுக்களில் உள்ள மாணவ மாணவியர்களுக்காக.
3. April 2025 மத்தியில் ஆரம்பிக்க இருக்கும் Bible Meditation குழுக்களுக்கான ஆயத்தப் பணிகளுக்காக.
4. திட்டமிடப்பட்டபடி GODependence Talk Show பயனுள்ள கிறிஸ்தவ தலைப்புகளில் ஒவ்வொரு மாதமும் தவறாமல் நடத்தப்பட.
5. ஆவிக்குரிய புத்தகங்களை வெளியிட திட்டமிட்டு அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ள நமது GODependence குழுவினருக்கு ஆண்டவர் ஞானம் மற்றும் ஒத்தாசைகளை நல்கிட.

**பயத்துக்கு இடம் கொடுப்பது உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய மிகச் சிறந்த திட்டத்தை மாற்றுகிறது. ஆகவே, மிகவும் பயத்துடனே செய்ய வேண்டியதாயிருந்தாலும் கூட, தேவன் செய்ய விரும்புகிறதைச் செய்ய அவருடைய வார்த்தையின் வல்லமையைப் பயன்படுத்துங்கள். அதனால் உண்டாகும் பலன்கள் மிகப்பெரிதாக இருக்கும். - ஜாய்ஸ் மேயர்**

## 2025 லெந்துகால வேதவாசிப்பு சவால்

"இயேசுவைப் பாருங்கள். அவர் பிரச்சினையில் இருந்த ஒவ்வொரு சமயமும் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தினார். அவர் சோதிக்கப்பட்டபோதும், சிலுவையில் பாடனுபவித்துக் கொண்டிருந்தபோதும் அவர் வார்த்தையைப் பயன்படுத்தினார்." - திமோத்தி கெல்லர்




🤔 இந்த 2025 லெந்து நாட்களில் உங்கள் விசுவாசத்தில் வளர ஒரு அர்த்தமுள்ள வழியைத் தேடுகிறீர்களா?

🤔 இந்த 40 நாட்களில் கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தை தியானிக்கும் வேளையில், முழு வேதாகமத்தையும் ஒருமுறை முழுமையாக வாசித்துவிட விரும்புகிறீர்களா?

🤔 இந்த 2025 லெந்து நாட்களில் ஜெபம், உபவாசம் மற்றும் வேதவசனங்கள் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் வளர விரும்புகிறீர்களா?

🌟 ஆம் எனில், இந்த 2025 லெந்துகால வேதவாசிப்பு சவால் உங்களுக்கானது தான்... 👌

💫**இதன் சிறப்பு அம்சங்கள்:**💫

✅ 05 மார்ச் 2025 முதல் 20 ஏப்ரல் 2025 வரை உள்ள 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் ஒருமுறை முழுமையாக வாசித்தல். (விடுபட்டவைகளை வாசிக்க வசதியான Catch Up days ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக)

✅ அவற்றை ஆதியாகமம் ஆரம்பித்து வெளிப்படுத்தின விசேஷம் வரை என்ற வரிசையில் இல்லாமல், வேதாகம நிகழ்வுகள் அவை நடைபெற்ற கால வரிசையில் (Chronological Order) வாசித்தல்.

✅ தினமும் உபவாசம் மற்றும் ஜெபம் பற்றிய மேற்கோள்கள் மற்றும் ஜெபக் குறிப்புகள்.

✅ லெந்து நாட்களில் உங்களை வழிநடத்த தினசரி தியானங்கள்.

✅ கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மருத்துவ அம்சங்கள் குறித்த கட்டுரைகள்.

✅ லெந்து காலத்தில் நடைமுறைப்படுத்த ஆன்மீக ஒழுங்குகள்.

✊ இந்த சவால், 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசிக்க உண்மையான உறுதிபூண்டு, தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், கிறிஸ்துவின் தியாகத்தை தியானிக்கவும் ஆயத்தமாக உள்ளவர்களுக்கு மட்டுமே. ✊

உங்களுக்கு விருப்பமும் நேரமும் உண்டெனில் இங்கே கிளிக் செய்து அதற்கான குழுவில் இன்றே இணையவும்: **https://chat.whatsapp.com/IOxLtgEdcW57o7lzTEuqAk**

நன்றி.

**- GODependence குழு.**

CLICK HERE https://chat.whatsapp.com/IOxLtgEdcW57o7lzTEuqAk

### சரியான பதில்கள்

➡ இடமிருந்து வலம்
1. திபேரியாக்கடல் (6:1)
2. ரபூனி (20:16)
13. பணப்பை (12:6 & 13:29)
14. இரத்தம் (6:55)
15. பிதா (15:1)

⬆ கீழிருந்து மேல்
6. வாசல் (10:7)
9. பெத்தானியா (11:1)
10. யோனா (1:42)
11. சீகார் (4:5)
12. யோவான் (5:33,35)
17. சமாதானம் (14:27)
18. ஒளி (3:20)

⬅ வலமிருந்து இடம்
3. மோசே (1:17)
5. மார்த்தாள் (12:2)
7. கானா (21:2)
16. பெதஸ்தா (5:2)

⬇ மேலிருந்து கீழ்
1. திதிமு (11:16)
4. மல்குஸ் (18:10)
6. வார்த்தை (1:1)
8. கபத்தா (19:13)

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 4**

வேதப்பகுதி: யோவான்

### சரியான பதில்களை அனுப்பிய முதல் 8 நபர்கள்:

- கே. லதா லிவிங்ஸ்டன்
- அ. ஜாய்ஸ்
- எஸ்தர் ஸ்டீபன்
- ஏ. ஆர். எலிசபெத்
- உ. சுகந்தி குமார்
- இ. உதயகுமார்
- ஸ்டெல்லா
- விஜய ராணி சாமுவேல்

Congratulations

### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்

அற்புதராஜ் சாமுவேல்

ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்

ஏ. ஆர். பீட்டர்

டெ. டென்சிங்

டார்வின் நேசகுமார் அ

ஷோபா தானியேல்

ஜோசஃபீன் ஷைனி பால்

கேதரின் சுஜி



**பரிசுத்த வேதாகமத்தை அறியாமல் இருப்பது என்பது கிறிஸ்துவை அறியாமல் இருப்பது ஆகும். - பரி. ஜெரோம்**

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 5

**வேதப்பகுதி: அப்போஸ்தலருடைய நடபடிகள்**

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**I.** அப்போஸ்தலர் நடபடிகளில் வரும் இடங்களின் பெயர்களை கண்டுபிடி.

1



2



3


**II.** அப்போஸ்தலர் நடபடிகளில் வரும் நபர்களின் பெயர்களை கண்டுபிடி.


4



5


6

**III.** அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்கள் என்ன?


7


8


9


10

https://forms.gle/ikKcMaqt8t5FWGsn7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/03/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேத வாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




JOIN NOW!

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1K சந்தாதாரர்களையும் 250 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil






### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

தேவனுடைய வார்த்தையை உடையவர்களாக இருப்பது எவ்வளவு மேன்மையும் மகத்துவமுமானது! - மார்ட்டின் லூத்தர்




உங்களுக்குத் தெரியுமா?

## மொழிகளின் தோற்றத்தை பரிசுத்த வேதாகமம் மட்டுமே விவரிக்கிறது

தற்போதைய உலகின் 7000 மொழிகள் வெவ்வேறு 'மூல மொழிக் குடும்பங்களிலிருந்து' தோன்றியவை.

மொழியியலாளர்கள் அவைகளைப் பின்னோக்கிக் கண்டுபிடிக்க முயன்றபோது, மூலமொழிக் குடும்பங்கள் இறுதியில் 'மொழி தனிமைப்படுத்தல்கள்' எனப்படும் முட்டுச்சந்திற்கு இட்டுச்சென்றன.

கிமு 3 ஆம் மில்லினியத்தில் மெசபதோமியாவில் சுமார் 70 ஆரம்பகால மொழிகள் திடீரென்று தோன்றியதாக மொழியியலாளர்கள் கண்டறிந்தனர். இதற்கு மொழியியலாளர்களிடம் எந்த விளக்கமும் இல்லை.

ஆனால் இது பைபிளின் பதிவுகளுடன் ஒத்துப்போகிறது. கலகக்காரர்கள் பாபேல் கோபுரத்தைக் கட்டத் தொடங்கியபோது, கடவுள் சொன்னார்: "நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்" (ஆதியாகமம் 11:7).


**பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படும் இந்த கவனத்தை ஈர்க்கும் புத்தகத்தைப் படிக்க உங்களுக்கு ஆர்வமாக இல்லையா?**

உங்களுக்குத் தெரியுமா?




பரிசுத்த வேதாகமத்தின் சிறிய அதிகாரம் சங்கீதம் 117! இது இரண்டு வசனங்கள் மட்டுமே கொண்டது. இது எல்லா இனங்களையும் தேவனைப் போற்றும்படி ஊக்கப்படுத்துகிறது.

பரிசுத்த வேதாகமம் மூன்று மொழிகளில் எழுதப்பட்டது! பெரும்பகுதி எபிரேயத்தில் உள்ளது. சில பகுதிகள் அரமேயம் (தானியேல், எஸ்றா) மற்றும் கிரேக்கம் (புதிய ஏற்பாடு) மொழிகளில் உள்ளன.




## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு- 4 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு -4**

**வேதப்பகுதி: யோவான்**

**I. என்ன சம்பவம் கூறு?**

1). பேதுரு 153 பெரிய மீன்கள் பிடித்தது
யோவான்: 21: 1- 12

2).இயேசு எருசலேமில் பவனி சென்றது
யோவான்: 2: 12- 15

3). விபச்சார ஸ்திரீயைக் கையும் மெய்யுமாய் பிடித்து இயேசுவிடம் கொண்டு வந்தது / உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் குற்றம் சுமத்தகடவன்.
யோவான்: 8: 3- 8

**I. யோவான் சுவிசேஷத்திலிருந்து அற்புதங்களை கண்டுபிடி :**

5).இயேசு 38 வருட வியாதியாயிருந்தவனை குணப்படுத்தியது.
யோவான்: 5: 2-9

6).இயேசு பிறவிக் குருடனை சுகப்படுத்தியது.
யோவான்: 9: 6- 8

7).இயேசு கடலின் மேல் நடந்தது
யோவான்: 6: 16- 21

**II. யோவான் சுவிசேஷத்திலிருந்து அற்புதங்களை கண்டுபிடி :**

1). கானா ஊர் கல்யாணத்தில் தண்ணீரை திராட்சரசமாக்கியது.
யோவான்: 2: 1- 11

2).ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசு சுகப்படுத்தியது
யோவான்: 4: 46- 53

3)5 அப்பம் 2 மீன்களை கொண்டு இயேசு ஐயாயிரம் பேர்களை போஷித்து மீதம் 12 கூடை எடுத்தது.
யோவான்: 6: 5- 13

4).இயேசு லாசருவை உயிரோடு எழுப்பியது
யோவான்: 11: 1- 46

**சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் :**

1. நிர்மலா பெனியல்
2. அ. ஜாய்ஸ்
3. உ. மிராக்கிளின் ஜெஸி
4. எஸ்தர் ஸ்டீபன்

*Congratulations*

**நேர்மையான தேடலின் மூலம் சிந்திக்கும் எந்த மனிதனும் வாழ்க்கை அல்லது விதி பற்றிய நேர்மையான எந்தக் கேள்விக்கும் தேவனுடைய பதிலைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் ஆகும். - ஜான் ரஸ்கின்**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**28 பிப்ரவரி 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**




















தேவனுடைய வார்த்தையினால் நிறைந்திருக்கிற ஆக்கப்பூர்வமான சிந்தனையானது வெளிப்பார்வைக்கு அருவருப்பானதாக தோன்றுகிறவைகளை தெய்வீக வல்லமை உடையதாக மாற்றும் சக்தியை உங்களுக்கு கொடுக்கிறது. - ஜாகின்மா N.E. ஆகு

## 📕 வேதவாசிப்புச் சவால்கள் - 01 ஏப்ரல் 2025 முதல்📕




"வேதாகமத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் வளருகிற கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் வேதாகமம் வாசிப்பதை நிறுத்தும்போது, அவர்கள் வளருவதும் நின்றுவிடுகிறது." - ஜான் வெஸ்லி

தேவன் நமக்காகப் பாதுகாத்து வைத்திருக்கும் முழுமையான ஆசீர்வாதங்கள் மற்றும் போதனைகளைக் கற்றுக்கொள்வதற்காக நீங்கள் முழு வேதாகமத்தையும் இன்னும் வாசிக்கவில்லை என்றால், 01 ஏப்ரல் 2025 அன்று தொடங்கும் எமது "வேதவாசிப்பு சவால்களில்" ஒன்றில் சேர உங்களை அன்புடன் அழைக்கிறோம். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க முடிவெடுத்ததற்காகவும் எங்களுடன் இணைந்து அதனை தொடர்ந்து வாசிப்பதற்காகவும் நீங்கள் ஒருபோதும் வருந்த மாட்டீர்கள் என்பது எமது நம்பிக்கை.

**பின்வருவன நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

🙇"GODependence வேதவாசிப்பு சவால் குழுவில் சேர்ந்து வேதாகமத்தைப் படிப்பது உத்வேகத்தை ஏற்படுத்துகிறது. நன்றி." - Shanthi. D

🙇 "GODependence வேதவாசிப்பு சவால் முதலில் வாசிக்க ஆரம்பிக்கும் போது தடைகள் வந்தது. ஆனால் போராடி தடைகளைத் தாண்டி வாசிக்க ஆரம்பித்த பின்னர், தேவன் உள்ளத்தில் கொடுத்த மகிழ்ச்சி அதிகம்." - Gnana Lalitha Mary. T

🙇 "GODependence வேதவாசிப்பு சவால் அதிக பிரயோஜனமாய் இருக்கிறது. நானாக வாசிக்கும் போது, பல நேரம் வாசிக்க தவறி விடுவேன். இதில் தினமும் கட்டாயம் வாசித்து விடுவேன். ஒரு நாள் வாசிக்காவிட்டாலும் மறுநாள் சேர்த்து வாசித்து விடுவேன்." - Porselvi Roy

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

- வேதவாசிப்பு சவால் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]
- 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]
- முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.
- வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.
- வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.
- வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!
- அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.
- பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு **கால அளவுத் திட்டம்** மற்றும் **மொழி**_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _**பெயர்** (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் **வயதை** இந்த இணைப்பில் **https://wa.me/96565962559** கிளிக் செய்து, **+965 6596 2559** என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

CLICK HERE **https://wa.me/96565962559**

- **GODependence குழு**

**** 👆 இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!

**பரிசுத்த வேதாகமமானது நமக்கு புத்தகங்களுக்கெல்லாம் புத்தகமாக மிகப் பிரதானமானதாக இருக்க வேண்டும்; பரிசுத்த வேதாகமத்துடன் ஒப்பிடுகையில் மற்ற அனைத்து புத்தகங்களும் மதிப்புக் குறைவானவை என்று கருதப்படவேண்டும். - ஜார்ஜ் முல்லர்**

# பெயர் குறிப்பிடப்படாத ஒரு அடிமைப் பெண்ணின் சாட்சி

## கிறிஸ்தவத்தின் எல்லா காலங்களிலும் விசுவாசிகளை ஊக்கப்படுத்தி வருகிறது.

**(2 இராஜா. 5:1-17)**

நாகமான் சீரியாவின் படைத்தலைவனாக இருந்தார். அவர் ஒரு வீரமிக்க போர்வீரன்; அவரது எஜமானரால் மிகவும் மதிக்கப்பட்டார், ஆனால் அவருக்கு தொழுநோய் இருந்தது.

இப்போது, சீரியாவின் படைகள் இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு சிறு பெண்ணை சிறைபிடித்துச் சென்றன. அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் எஜமானியிடம், "என் எஜமான் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியைக் கண்டால் நலமாயிருக்கும்! அவர் அவருடைய தொழுநோயைக் குணப்படுத்துவார்" என்று சொன்னாள்.

நாகமான் சமாரியாவுக்குச் சென்று தீர்க்கதரிசி எலிசாவின் அறிவுறுத்தலின்படியே யோர்தானில் ஏழு முறை முழுகினான். நாகமான் தனது தொழுநோயிலிருந்து குணமடைந்து, உண்மையான தேவனை ஆராதிக்கிறவனாக மாறினான்.

இந்த சிறிய அடிமைப்பெண் தனது முன்மாதிரியால் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் பாடம் கற்பிக்கிறாள்.

**அடிமைப் பெண்ணின் செயல்கள் நம்மிடம் பல விஷயங்களை கற்று தருகின்றன:**

- அவள் தன் குடும்பத்தினரிடமிருந்தும் அன்பானவர்களிடமிருந்தும் பிரிந்திருந்தபோதிலும், அவள் தொடர்ந்து கர்த்தரை நம்பினாள்.
- அவள் தன் எதிரிகளை நேசித்தாள். தன்னை சிறைபிடித்தவர்களிடம் அவள் கசப்பாக இருந்திருக்கலாம், ஆனால் அவள் அவர்களை நேசித்தாள், அவர்கள் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும் என்று விரும்பினாள்.
- அந்த வீட்டில் அவளுடைய தாழ்ந்தநிலையால் அவள் சோர்வடையவில்லை, ஆனால் உண்மையைப் பேசும் நம்பிக்கை அவளுக்கு இருந்தது.
- பணக்காரர்களையும் முக்கிய நபர்களையும் இரட்சிப்புக்குக் கொண்டுவருவதற்கு தேவன் மிகவும் தாழ்மையான மக்களைக்கூடப் பயன்படுத்தமுடியும் என்பதை அவளுடைய வாழ்க்கை கற்பிக்கிறது. துறைமுகத்திற்கு ஒரு பெரிய கப்பலை இழுத்துச் செல்லும் ஒரு சிறிய இழுவை வண்டியைப்போல அவள் இருந்தாள்.
- சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், நாம் அனைவருடனும் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 5

### வேதப்பகுதி: அப்போஸ்தலருடைய நடபடிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | 3 | 4 |
| ■ | 5 | | | 6 | | ■ | |
| | | | 7 | ■ | ■ | | |
| | | | 8 | | | | |
| | 9 | | | 10 | | | 11 |
| 12 | | | | | | 13 | |
| 14 | | | | | 15 | 16 | |
| ■ | ■ | | | | 17 | | 18 |

**➡ இடமிருந்து வலம்**

1. இயேசு அப்போஸ்தலருக்கு தரிசனமான நாட்கள் எத்தனை?
6. பந்தி விசாரணைக்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர்?
8. பவுலை கப்பலில் பட்சமாய் நடத்திய நூற்றுக்கதிபதி
9. எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசுவை பிரசங்கித்தவன்
10. மெலித்தா தீவின் முதலாளி
12. ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்டவன்
14. சப்பீராளின் கணவன்

**⬅ வலமிருந்து இடம்**

3. யோசேப்பு விற்கப்பட்டு கொண்டு போகப்பட்ட தேசம்
13. பர்னபா யாருடன் சீப்புருத்தீவுக்கு போனான்
15. வசனத்தை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்ட பட்டணத்தார்
17. ஏரோதுராஜாவால் பட்டயத்தால் கொல்லப்பட்டவன்
18. பேதுருவால் குணமாக்கப்பட்ட திமிர்வாதக்காரன்

**⬇ மேலிருந்து கீழ்**

2. பவுலை அப்போஸ்தலரிடம் அழைத்துச் சென்றவன்
4. செசரியாவிலிருந்த நூற்றுக்கதிபதி
5. சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்தி பெற்ற பட்டணம்
11. யாருடைய வீடு ஜெப ஆலயத்துக்கு அடுத்ததாயிருந்தது

**⬆ கீழிருந்து மேல்**

7. கோத்திரத்தலைவன்
12. யூதாசுக்கு பதிலாக அப்போஸ்தலப்பட்டம் பெற்றவன்
16. ஆலோசனை சங்கத்திலிருந்த கனம்பெற்ற பரிசேயன்

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

CLICK HERE -https://forms.gle/gRcHEEXovfHNKiRS8

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/03/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**ஜனங்கள் வேதாகமத்திற்குத் திரும்பி, தங்களுடைய தலைமுறையில் தேவனுடைய வார்த்தையை புத்துணர்வுடன் கேட்டு அவ்வார்த்தையின் சவாலை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே பல பெரிய எழுப்புதல்கள் வரலாற்றில் நடந்திருக்கின்றன. - கிரெய்க் கீனர்**

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc



வேறு எந்த புத்தகத்தையும் விட அதிகமாக வேதாகமங்கள் வாங்கப்படுகின்றன, அவைகளில் வாசிக்கப்படுபவை மிகவும் குறைவு. – வன்ஸ் ஹேவனர்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

Praise the Lord...... என்னுடைய பெயர் லதா. நான் பாலூரைச் சார்ந்தவள். கிறிஸ்தவ பின்னணியிலிருந்து தான் வந்தேன்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்?**

பைபிள் வாசிக்கும்போது, என்னுடைய வழக்கம் என்னவென்றால் ஏதாவது ஒரு பக்கத்தை எடுத்து அதிகாரம் எதிலிருந்து தொடங்குதோ அதிலிருந்து தொடர்ந்து வாசிப்பேன். இப்படித்தான் நான் முன்பு படித்துக் கொண்டிருந்தேன். அதன் பிறகு ஒவ்வொரு வருடம் ஆரம்பிக்கும்போதும் முழுவதுமாக முடிக்கவேண்டும் என்று தீர்மானித்து ஆதியாகமத்திலிருந்து ஆரம்பிப்பேன். பின், தொடர்ந்து யாத்திராகமம், லேவியராகமம் வரை படித்து எண்ணாகமம் வரும்போது படிப்பதை விட்டுவிடுவேன். அதன்பிறகு எதாவது ஒரு புத்தகத்தை தேர்ந்தெடுத்து, அதை முழுவதுமாக படிப்பேன். ஆனாலும் முழு பைபிளையும் வாசித்தது இல்லை.

**நீங்கள் தற்போது வாசித்து முடித்திருக்கிற இந்த வேதவாசிப்பு சவாலில் GODEPENDENCE வாட்சாப் குழுவின் நடைமுறைகள் எந்த அளவில் உதவின?**

இப்படி இருக்கும்போது, ஒருநாள் எனக்கு தெரிந்தவங்க GODependence - ஐ அறிமுகப்படுத்தினாங்க. நான் அதில் சேர்ந்து படித்தேன். இதுவரை 3 அல்லது 4 முறை முடித்திருப்பேன் என நினைக்கிறேன். நவம்பர் மாதம் "one month challenge" ல சேர்ந்து படிச்சேன். ஆனால் எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. GODependence Group இருந்ததனால் தான் என்னால் முதலிலிருந்து கடைசி வரை படிக்க முடிந்தது. இல்லையென்றால் நான் வாசித்து முடித்திருக்க முடியாது.

**நீங்கள் பரிசுத்த வேதாகம வாசிக்கும் போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

எப்படியெனில், படிக்க ஆரம்பித்ததும் அதிக தலைவலியினால் ஒன்றும் செய்ய முடியாமல் அவதிப்பட்டேன். ஆனால் மற்ற வேலைகள் செய்யும்போதெல்லாம் ஒன்றுமிருக்காது. பைபிள் வாசிக்க எடுத்தவுடனே தலை வலிக்கும். அதற்கப்புறம் நல்லா ஜெபம் செய்துவிட்டு, இனி எப்படி வலித்தாலும் வலிக்கட்டும் என்று தொடர்ந்து படிக்கத் தொடங்கினேன். அந்த ஒரு மாத சவாலை முடித்தேன். ஆனாலும் அன்றன்று உள்ளதை என்னால் முடிக்கவில்லை. சில நாட்கள் எப்படியாயினும், இரவு எவ்வளவு நேரமானாலும் முடித்துவிட்டுத்தான் உறங்கபோக வேண்டும் என்பதில் உறுதியோடு இருப்பேன். ஆனாலும் அது எனக்கு திருப்தி தரவில்லை. பின்னர் டிசம்பர், ஜனவரி "2 Month challenge" ல் சேர்ந்து முடித்தேன். இப்பவும் பிப்ரவரி - மார்ச் (2 month challenge) படித்துக் கொண்டிருக்கிறேன்.

**இறுதியாக, தாங்கள் GODependence குறித்து சொல்ல விரும்புவது என்ன?**

இந்த GODependence இருந்ததினால் தான் என்னால் பைபிள் முழுவதுமாக படிக்க முடிந்தது. இந்த 2 மாத சவாலில் படிக்க நிறைய நேரம் கிடைக்கிறது. நிதானமாக தியானித்து படிக்க நேரம் இருக்கிறது. அதனால்தான் திரும்பவும் இப்போது தொடங்கியிருக்கிறேன். GODependence இருந்ததினால் தான் என்னால் முதலிலிருந்து கடைசி வரை படிக்க முடிந்தது. இல்லையென்றால் நான் வாசித்து முடித்திருக்க முடியாது. இப்பவும் இது எனக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. அதனால் நான் ஆண்டவருக்கு நன்றி சொல்கிறேன். இப்பொழுதெல்லாம் என்னால் அமைதியாகவும், எந்த தொந்தரவும் இல்லாமலும் படிக்க முடிகிறது. மிகுந்த பிரயோஜனமாயிருக்கிறது. நன்றி.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

- **70 வயதே ஆனாலும் வேதாகமம் வாசிக்க வயது ஒரு தடை கிடையாது** CLICK HERE BRO. ROBERTSON
- **வேதாகமம் வாசித்தல்எல்லா விதத்திலும் ஆசீர்வாதமாக இருக்க எனக்கு உதவுகிறது** CLICK HERE SIS . REMI
- **எவ்வளவு வேதாகமத்தை வாசிக்கிறோமோ அவ்வளவு நம்மை உயர்த்துவார்** CLICK HERE SIS. JEYANTHY
- **கையிடும் வேலை ஆசிர்வதிக்கப்பட கையிலே வேதாகமம் எடுத்து வாசித்தேன்** CLICK HERE SIS. JAYAMARY VIJAYA KUMAR
- **தேவன் யாரென அறியாத நான் வேதாகமத்தை வாசித்து முடித்திருக்கிறேன் எப்படி தெரியுமா?** SIS.GOMATHI CLICK HERE



இறுதியில், மாற்றப்பட்ட வாழ்க்கையும், இயேசுகிறிஸ்துவுடனான ஆழமான மற்றும் நிலையான உறவுமே தனிப்பட்ட வேத ஆராய்ச்சியின் குறிக்கோள் ஆகும். - கே ஆர்தர்

# அப்போஸ்தலர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 62
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 30- கி.பி. 62
**நூலின் ஆசிரியர் :** லூக்கா
**புத்தக வகை :** திருச்சபையின் வரலாறு

## நூல் அறிமுகம்

அப்போஸ்தலர் நடபடிகள் என்னும் நூல் லூக்கா நற்செய்தி நூலின் தொடர்ச்சியான இரண்டாவது பகுதி (1:1). இந்நூலின் பிந்திய பகுதியில் ஆசிரியர் தாமே கண்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதாக எழுதுகிறார். 'நாங்கள் பயணம்செய்தோம், நாங்கள் தங்கியிருந்தோம், நாங்கள் போதித்தோம்' போன்ற பகுதிகள் இந்நூலின் ஆசிரியர் பவுலின் உடன்பணியாளர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன (16:10-17; 20:1-18; 27: 1-28:16).

## சூழலும் நோக்கமும்

இப்புத்தகம் ஆரம்பகால திருச்சபை வரலாற்றை வழங்குகிறது. அதோடு அப்போஸ்தலர்கள் எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் சுற்றியுள்ள உலகில் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருந்ததையும், பரிசுத்த ஆவியானவரின் ஈவையும், அப்போஸ்தலர்கள் தங்கள் செய்தியை உறுதிப்படுத்த நடைபெற்ற பல அற்புதங்களையும் இப்புத்தகம் காட்டுகிறது.இப்புத்தகம் கிறிஸ்துவின் பரமேறுதலுக்கும் புதிய ஏற்பாட்டு நியதியின் நிறைவுக்கும் இடையிலான இடைநிலை நேரத்தை உள்ளடக்கியது. கிறிஸ்துவோ அவர் வழியைப் பின்பற்றுபவர்களோ ரோம அரசுக்கு எதிராகக் குற்றம் ஏதும் செய்யாதவர்கள் எனவும், பிற இனத்தாருக்குத் அப்போஸ்தலராக தேர்ந்து கொள்ளப்பட்ட பவுல் யூதருக்கு எதிராகப் பெருந்தவறு ஒன்றும் செய்யவில்லை என்றும் எடுத்துரைக்கவும் இந்நூலை ஆசிரியர் எழுதுகிறார். ஆவியானவர் துணையுடன் தேவனது மீட்புத் திட்டத்துக்குச் சான்று பகர்வது திருச்சபையின் கடமை என்பது இப்புத்தகத்தில் தெளிவாகிறது. அப்போஸ்தலர்கள் - குறிப்பாகப் பேதுரு & பவுல் ஆற்றிய திருத்தொண்டு எடுத்துரைக்கப்படுகிறது. பவுல் ரோமில் சான்று பகர்ந்து கொண்டிருப்பதே நூலின் முடிவுரையாக அமைகின்றது.

## முக்கிய வசனங்கள்

அப் 1:8, அப் 2:4, அப் 4:12, அப் 4:19-20, அப் 9:3-6, அப் 16:31

## புத்தகத்தின் சுருக்கம்

அப்1:8 ல் உள்ள உயிர்த்தெழுந்த ஆண்டவரின் கூற்றே இந்நூலுக்குச் மையச் செய்தியாகும். யூதரும் சமாரியரும் கிரேக்கரும் பிற இனத்தவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஆண்டவரின் சாட்சிகளாகின்றனர். இறைவார்த்தைப் பணி வளர்ந்து பெருக, எங்கும் திருச்சபைகள் நிறுவப்படுகின்றன. எனவே இந்நூலைத் "பரிசுத்த ஆவியின் நடபடிகள்" எனவும் அழைக்கலாம். பேதுரு, ஸ்தேவான், பவுல் ஆகியோரின் அருளுரைகளும், பேதுரு, பவுல் ஆகியோரின் மனமாற்ற அனுபவங்களும் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறுமிடங்களில் ஐக்கியம், அப்பம்பிடுதல், ஜெபம், சான்றுபகர்தல், தொண்டாற்றுதல், அன்புப் பகிர்வு (11: 27-30,, 2: 42-47, 4: 32-37) போன்றவை சீடர்களின் தனித்தன்மைகளாக இந்நூல் காட்டுகிறது. தமஸ்கு சாலையில் பவுலின் மனமாற்றம் (அப்9:1-31) இந்நூலின் சிறப்பம்சமாகும். சீஷர்கள் எருசலேமிலும் (அப் 1-8:3), யூதேயாவிலும் சமாரியாவிலும் (8:4-12:25), பூமியின் கடைசிமுனைகள் வரை (13:1-28) அவருடைய சாட்சிகளாக இருக்க பரிசுத்த ஆவியால் அதிகாரம் பெற்றனர். இந்நூலின் கடைசிப் பகுதியில் பவுலின் மூன்று மிஷனரி பயணங்கள் (13:1-21:16), எருசலேம் மற்றும் செசரியாவில் அவரது சோதனைகள் (21:17-26:32) மற்றும் ரோம் பயணம் (27:1-28:31) ஆகியவை காணப்படுகின்றன.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

அப்போஸ்தலர் புத்தகம் பழைய உடன்படிக்கையிலிருந்து புதிய உடன்படிக்கைக்கு மாறும் நிகழ்வை உறுதிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் தேவ மக்களின் வெளிப்புற "அபிஷேகம்" என்பதே முதன்மையான செயல்பாடாக இருந்தது. அவர்களில் மோசே (எண் 11:17), ஒத்னியேல் (நியா 3:8-10), கிதியோன் (நியா 6:34), சவுல் (1 சாமு 10:6-10) அடங்குவர். இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு, ஆவியானவர் விசுவாசிகளின் இதயங்களில் வாழ வந்தார் (ரோமர் 8:9-11; 1 கொரி 3:16), அவர்களை உள்ளிருந்து வழிநடத்தி, பலப்படுத்தினார். பரிசுத்த ஆவியானவர், விசுவாசத்துடன் தம்மிடம் வருபவர்களுக்கான தேவனின் ஈவு ஆவார். "நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலான நீதியைக் குறித்து" குற்றமற்றவர் ஒப்புக்கொண்ட பவுல் (பிலி 3:6) தனது அனைத்து சட்ட முயற்சிகளும் பயனற்றவை என்பதை உணர்ந்து, அவற்றை "குப்பைகள் என்று கருதினார். நியாயப்பிரமாணத்திலிருந்து வரும் என் சொந்த நீதி இல்லை, ஆனால் அது கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம் - தேவனிடமிருந்து வரும் நீதியானது விசுவாசத்தினால் வருகிறது "(பிலி 3:8-9) என்று கூறினார். அப் 10:9-15 இல் உள்ள அசுத்தமான விலங்குகள் நிறைந்த போர்வை பற்றிய பேதுருவின் பார்வை, பழைய உடன்படிக்கையிலிருந்து யூதர்கள் & புறஜாதியார் ஒற்றுமையுடன் ஒரு உலகளாவிய திருச்சபையில் மாறுவதற்கான புதிய உடன்படிக்கையின் மற்றொரு அறிகுறியாகும். பேதுருவின் பார்வையில் "அசுத்தமான" விலங்குகள் புறஜாதியினரை அடையாளப்படுத்தியது, அவர்கள் கிறிஸ்துவின் தியாக மரணத்தின் மூலம் தேவனால் "சுத்தமானவர்கள்" என்று அறிவிக்கப்பட்டனர். பழைய உடன்படிக்கை நியாயப்பிரமாணம் அதன் நோக்கத்தை நிறைவேற்றியது (கலாத் 3:23-29).

## நடைமுறைப் பயன்பாடு

தேவன் தம்முடைய ஆவியின் மூலம் சாதாரண மக்களைப் பலப்படுத்தும் போது அவர்கள் மூலம் ஆச்சரியமான காரியங்களைச் செய்ய முடியும் என்பதை தேவன் எவ்வாறு மீனவர்கள் மற்றும் சாமானியர்களின் ஒரு குழுவை எடுத்துக்கொண்டு, உலகத்தை தலைகீழாக மாற்ற அவர்களைப் பயன்படுத்தினார் என்பதை அப்போஸ்தலர் புத்தகம் காட்டுகிறது (அப் 17:6). கிறிஸ்தவர்களை வெறுத்த பவுலை எடுத்து அவரை வரலாற்றின் மிகப் பெரிய கிறிஸ்தவ சுவிசேஷகராக தேவன் மாற்றினார், புதிய ஏற்பாட்டின் கிட்டத்தட்ட பாதி புத்தகங்களை எழுதியவர் அவரே. வளர்ந்து வரும் திருச்சபையின் நம்பமுடியாத வேகமான விரிவாக்கத்தைத் தூண்டுவதற்கு கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்புறுத்தலை தேவன் பயன்படுத்தினார். அப்படியே, நம் இதயங்களை மாற்றவும், பரிசுத்த ஆவியானவரால் நம்மை பலப்படுத்தவும், கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பின் நற்செய்தியைப் பரப்புவதற்கு ஒரு பேரார்வத்தை அளிக்கவும் தேவனால் செய்ய முடியும். உலகில் தேவனின் வேலையை நம் சொந்த சக்தியில் நிறைவேற்ற முயற்சித்தால், நாம் தோல்வியடைவோம். அப்போஸ்தலர் 2ல் உள்ள சீடர்களைப் போல, நாம் உண்மையாக நற்செய்தியை அறிவிக்க வேண்டும், முடிவுகளுக்காக தேவனை நம்ப வேண்டும், மேலும் "அப்போஸ்தலர்களைப் போல போதனையிலும் ஐக்கியத்திலும், அப்பம் பிட்குவதற்கும் ஜெபத்திற்கும்" (அப் 2:42) நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

## நூலின் அமைப்பு

1) முன்னுரை (விண்ணேற்றம்) 1:1 - 11
2) எருசலேமில் சாட்சி பகர்தல் 1:12 - 8:3
3) யூதேயா, சமாரியாவில் சாட்சி பகர்தல் 8:4 - 12:25
4) உலகின் கடையெல்லைவரை சாட்சி பகர்தல் 13:1 - 28:3

GODDependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தேவனையும், மற்றவர்களையும் அன்பு கூரும்படி கற்றுக்கொள்ளுதல் என்கிற இரண்டு காரியங்களை நீங்கள் செய்வதற்காகவே தேவன் இந்த உலகில் உங்களை வைத்திருக்கிறார் என பரிசுத்த வேதாகமம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. - ரிக் வாரன்

## 1

### ரமலான் மற்றும் லெந்துகால வேத வாசிப்பு சவால்கள் - 2025

30 நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடிக்கும் ரமலான் கால வேதவாசிப்பு சவால்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) 6 வது முறையாக இந்த வருடம் பிப்ரவரி 28 இல் தொடங்கின. இந்த குழுக்களில் 290 பேர் இணைந்துள்ளனர்.

இந்த வருடத்தில் முதல் முறையாக 40 நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடிக்கும் லெந்து கால வேதவாசிப்பு சவால் குழுக்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மார்ச் 5 ல் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 1250 பேர் இணைந்துள்ளனர்.



## 2




### GODependence கருத்தரங்கு - மார்ச் 2025

**தலைப்பு: லெந்துகால உபவாசம் - வெறும் சடங்கா அல்லது ஆன்மீக அருமருந்தா?**

(உபவாசம் இருப்பதின் சரீர மற்றும் ஆவிக்குரிய நன்மைகளைப் பற்றிய ஒரு கிறிஸ்தவ மருத்துவரின் கண்ணோட்டம்)

**நாள்: 16 மார்ச் 2025 ஞாயிறு மாலை இந்திய நேரம் 4 முதல் 5 மணி வரை**

## 3

### சிறுவர் வேதவாசிப்பு சவால்கள்

2024-25 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2025 மார்ச் மாதத்தின் முதல் வாரத்துடன் நிறைவு பெற்றன. சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

வரும் கல்வியாண்டு 2025-26க்கான அடுத்த சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் ஜூன் 2025 இல் ஆரம்பிக்கும். இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் 2025 மே மாதத்தில் குழுக்களில் பகிரப்படும்.



## 4



### வேத தியான குழுக்கள் (BMG) - April 2025 முதல்

வேத தியான குழுக்கள் (BMG) மீண்டும் ஏப்ரல் 2025-ல் இருந்து மறுபடியும் ஆரம்பித்து தொடர்ந்து நடத்த இருக்கிறோம். இவற்றில் கலந்து கொள்ள விரும்புகிற வர்களுக்கான பயிற்சிகள் மார்ச் 2025 / ஏப்ரல் 2025 ல் நடைபெறும்.

இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் 2025 குழுக்களில் பகிரப்படும்.

---

FOLLOW US!

GODependence **வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Website)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

மகா பெரிய (வேதப்) புத்தகத்தின் மீதான உண்மையான அன்பு மகா பெரிய தேவனிடம் இருந்து மாபெரும் அமைதியை நமக்குக் கொண்டு வருகிறது, மேலும் அது நமக்கு மிகப்பெரியதொரு பாதுகாப்பாகவும் இருக்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்